Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.532/2019

**Depositions of PW- 2**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.செல்வக்குமார் | Occupation | Accountant |
| Father's name | சின்னதுரை | Calling | |
| Village | மாங்குடி | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of July 2026.

09.07.2026

1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மாங்குடியில் குடியிருந்து வருகிறேன். Health Department ல் Accountant ஆக வேலை செய்து வருகிறேன். கடந்த 2013 ம் வருடம் ராஜாராம் Associates Auditing நிறுவனத்தில் அசோக்குமார் என்பவரிடம் Auditor Assistant ஆக வேலை செய்தேன். கடந்த 27.06.2013 அன்று திருவில்லிபுத்தூர் பேருந்து நிலையம் எதிரில் உள்ள டாஸ்மாக் கடை எண்.11864 01.04.2013 லிருந்து 27.06.2013 வரையிலான கணக்கு தனிக்கை செய்தபோது ரூ.8,66,200/- பற்றாக்குறையாக இருந்தது. நான் இதுசம்மந்தமாக எனது நிறுவனத்திற்கு அறிக்கை அனுப்பினேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் பட்டய கணக்காளர் தேர்வு எழுதவில்லை என்றால் சரிதான்.B.Com மட்டும் தான் முடித்துள்ளேன் என்றால் சரிதான். பொதுவாக பட்டயகணக்காளர் தேர்வு எழுதி தகுதி பெற்ற நபர் தான் கணக்கு தனிக்கை செய்யவேண்டும் என்று விதி உள்ளது என்றால் சரிதான்.மேற்படி 01.04.2013 லிருந்து 27.06.2013 வரையிலான தேதிகளுக்கு இடைப்பட்ட நாட்களில் உள்ள கணக்குகளை தணிக்கை செய்யுமாறு மேலாளர் தான் என்னை அறிவுறுத்தினார் என்றால் சரிதான். எதற்காக மேற்படி தேதிகளில் மட்டும்

கணக்கு தணிக்கை செய்யுமாறு கூறினார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி மதுபான கடையில் வசூலிக்கப்படும் பணமானது யாரிடம் ஒப்படைக்கப்படும் என்பது பற்றியும்அது எங்கு செலுத்தப்படும் என்பது பற்றியும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி தேதியில் மேற்படி மதுபான கடைக்கு நான் செல்லவில்லை என்றாலும் அங்கு கணக்கு தணிக்கை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க தற்போது நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி டாஸ்மாக் கடை எண்.11864 ல் 01.04.2013 லிருந்து 27.06.2013 வரையிலான கணக்கு தனிக்கை செய்ததாகவும் அதில் ரூ.8,66,200/– பற்றாக்குறையாக இருந்ததாக கண்டறியப்பட்டதாகவும் தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிபுத்தூர்.